1987 நவம்பர் 12]

2. உடல் ஊனமுற்ற குழந்தைகள் (அதாவது உடல் ஊனம் 50 விழுக்காடுகளுக்கும் கூடுதலாயிருந்தால்) தமது இருப்பிடத்திலிருந்து பள்ளிக்கு அல்லது சிகிச்சை பெற மருத்துவமனைக்கு சென்று வர இலவசப் பயணச் சலுகை வழங்கப்படுகின்றது. மேற்படி குழந்தைகள் கல்வி பயிலும் நிறுவனம் அல்லது மருத்துவ அலுவலரிடமிருந்து சான்றிதழ் பெற்று இச்சலுகையை பெறலாம்.

3. உடல் ஊனமுற்றவர்கள் தமது இருப்பிடத்திலிருந்து கல்லூரி/பயிற்சி நிறுவனங்கள் மற்றும் இருப்பிடத்திலிருந்து, வேலை செய்யும் நிறுவனம்/தொழிற்பட்டறைக்கு சென்று வர சாதாரண மாணவ மாணவியர்க்கு வழங்கும் சலுகைப் பயணச் சீட்டில் 50 சத விகிதம் சலுகை வழங்கும் செயற்குறிப்பு சமூக நல இயக்குநரிடமிருந்து தற்போது பெறப்பட்டு அரசின் பரிசிலனையில் உள்ளது.

திரு. கைதை ந. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விவர அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதைப் போல முழுமையாக கண்பார்வை அற்றவர்களுக்கு முழு சலுகையும், 50 சதவிகித விழுக்காட்டுக்கு மேலுள்ள உடல் ஊனமுற்றவர்களுக்கு, குழந்தைகளுக்கு சலுகையும், உடல் ஊனமுற்றவர்களுக்கு 50 சதவிகிதம் வழங்கப்படுகின்ற கொள்கை குறிப்பும் அரசின் பரிசிலனையில் இருப்பதாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. எனவே அந்த 50 சதவிகிதம் சலுகையையும் முழுக்க 100 சதவிதமாக மாற்றி விரைவில் இலவச பாஸ் வழங்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து போக்குவரத்துத் துறையோடு கலந்து பேசி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப் படும்.

அநாதை விடுதிகளிலுள்ள மாணவர்களுக்கு அளிக்கப்படும் உதவித் தொகையை அதிகப்படுத்தல்.

76—*(வினா எண் 14093)—திரு.கி. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு சத்துணவு சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள அனாதை விடுதிகளிலுள்ள மாணவர்களுக்கு அளிக்கப்படும் உதவித்தொகையினை அதிகப்படுத்தித் தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) அந்தந்த மாதத்து உதவித்தொகை அநாதை இல்லங்களுக்கு உடனடியாக வழங்கப்பட்டு வருகிறதா?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) தொண்டு நிறுவனங்களுக்கான பராமரிப்பு மானியம் அரையாண்டிற்கொருமுறை அந்தந்த அரையாண்டு முடிவதற்குள் வழங்கப்பட்டு வருகிறது.

திரு. கி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு அநாதை விடுதிகளில் உள்ள மாணவர்களுக்காக அளிக்கின்ற தொகை எவ்வளவு? மாநில அரசு அதற்கு ஈட்டுத் தொகையாக அளிப்பது எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன். மத்திய அரசு அளிக்கின்ற தொகை அளவுக்கு மாநில அரசும் தந்தால் மாணவர்களுக்கு உதவியாக இருக்கும். அந்தந்த மாதம் உதவித் தொகை கொடுப்பது என்று இருக்கிறது. அப்படி அந்தந்த மாதமே கொடுக்காவிட்டாலும், மூன்று மாதத்திற்கு ஒரு முறையாவது அநாதை இல்லங்களுக்கு உதவி செய்ய தொகை வழங்கினால் நன்றாக இருக்கும். அவர்கள் 'ஓவர் டிராப்ட்' வாங்கி வட்டிக் கட்டிக்கொண்டு கஷ்டப்படுகின்ற சூழ்நிலை இருக்கின்றது. பல அநாதை இல்லங்களிலே. ஆகவே அரசு அதை கவனித்து அவர்களுக்கு உதவி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அநாதை இல்லங்களில் 12,955 குழந்தைகள் பயன்பெற்று வருகின்றனர். 31-3-1984 வரை மாதம் ஒன்றுக்கு ஒரு குழந்தைக்கு ரூபாய் 76.50 வீதம் பராமரிப்பு மானியம் வழங்கப்பட்டது. 1-4-1984 முதல் மத்திய அரசால் வெளியிடப்பட்டுள்ள திருத்திய திட்டப்படி தொண்டு நிறுவனங்களுக்கு கீழ்க்கண்டவாறு அளிக்கப்படுகிறது. உணவு, உடை, சோப்பு, எண்ணெய் போன்றவை வாங்க மாதத்திற்கு, ஒரு குழந்தைக்கு ரூபாய் 150 வீதம் அதிகபட்சமாக வழங்கப்படுகிறது. அதுபோல வாடகை ரூபாய் 40 வீதம் குழந்தை ஒன்றுக்கு வழங்கப்படுகிறது. ஆனால் கட்டிட மானியம் (ரூபாய் 150) வழங்கப்படுகிறபோது (கட்டட) வாடகை மானியம் (மட்டும்) நிறுத்தப்படுகிறது.

சத்துணவு திட்டத்திற்கு வாங்கப்படும் காய்கறிகள்.

77—*(வினா எண் 14985)—திரு. துரை அன்பரசன் : மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சத்துணவுத் திட்டத்திற்கு வாங்கப்படும் காய்கறிகள் கூட்டுறவு சங்கம் மூலமாகத்தான் வாங்க வேண்டுமென்று அரசு ஆணையிட்டுள்ளதா ?